முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.31/2014** **DW: 3**
**17.04.2026**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் பிரதிவாதி தரப்பு 3 ம் சாட்சியாகிய மணி என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | வயது | 66 |
| த/பெயர் | மாரிமுத்து | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | இராமநத்தம் |
| மாவட்டம் | கடலூர் | | |

## குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் வாதிகளுக்கோ, பிரதிவாதிகளுக்கோ, அழகப்ப படையாச்சிக்கோ நான் உறவினர் இல்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் இராமநத்ததில் தங்கியதாக சொல்வதற்கு ஆவணங்கள் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் இராமநத்ததில் எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை குடியிருந்து வந்தேன் என்ற விபரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. நான் 2002 ஆம் வருடத்திலிருந்து திட்டக்குடி சாலையில் வசித்து வருகிறேன். அழகப்ப படையாச்சியின் மாமனார் பெயர் எனக்கு தெரியாது. அழகப்ப படையாச்சியின் மாமனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு மகள்கள். பெரியபொன்னின் பெயர் பெரியம்மாள், சின்னபொன்னின் பெயர் நாகம்மாள்.

அழகப்ப படையாச்சிக்கு இரண்டு தாரம் என்றால் சரியல்ல. ஒன்று மட்டும்தான். அழகப்ப படையாச்சியின் திருமணத்திற்கு நான் சென்றிருந்தேனா என்றால் சென்றிருப்பேன், ஆனால் தற்போது ஞாபகமில்லை. நான் இராமநத்ததில் சொந்த வீட்டில் குடியிருந்தேனா அல்லது வாடகை வீட்டில் குடியிருந்தேனா என்ற விபரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எழுத்தூரில் எந்த காலத்திலும் குடியிருந்தது இல்லை என்றால் சரிதான். எழுத்தூரில் யார் யார் குடியிருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

செல்வம் என்பவர் எந்த வருடத்தில் பிறந்தார், எந்த வருடத்தில் இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி செல்வத்திற்கு யார் திருமணம் செய்து வைத்தார் மற்றும் யாரை திருமணம் செய்து கொண்டார் என்ற விபரமும் எனக்கு தெரியாது. செல்வம் இராமநத்ததில் பள்ளி படிப்பை முடித்தார் என்றால் சரிதான். நான் பள்ளி படிப்பை முடித்துள்ளேன். நான் பள்ளி மாற்றுச்சான்று (T.C) வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். எனது மாற்றுச்சான்றிதழில் எனது தந்தைதான் பெற்றோர் என்ற இடத்தில் கையெத்திட்டார் என்றால் சரிதான். பெற்றோரை தவிர அந்த இடத்தில் வேறு யாரும் கையெழுத்து போடமுடியாது என்றாலும் காப்பாளர் என்ற முறையில் கையெழுத்து போட முடியும் என்றால் சரியல்ல. பெற்றோர் மட்டும்தான் கையெழுத்து போடமுடியும். என்னிடம் காட்டப்படும் EX.X1–ல் செல்வத்தினுடைய பள்ளி மாற்றுச் சான்றிதழில் பெற்றோர் கையொப்பம் என்ற இடத்தில் அழகப்பன் என்ற பெயர் உள்ளது என்றால் சரிதான். அழகப்பன் செல்வத்தின் தந்தை என்ற முறையில் கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் பாதுகாவலர் என்ற முறையிலும் கையெழுத்திட்டிருப்பார். என்னிடம் காட்டப்படும் EX.X1–ல் அந்த ஆவணத்தில் பெற்றோர் கையொப்பம் என்ற விபரம் மட்டும் உள்ளது. ஆனால் பாதுகாவலர் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் EX.A5–ல் அழகப்ப படையாச்சியின் குடும்ப அட்டை நகல் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் அழகப்ப படையாச்சியின் குமாரர்கள் என்று 4 வதாக செல்வத்தின் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் செல்வத்தின் தலைபெழுத்து A என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். A என்றால் அழகப்ப படையாச்சி. என்னிடம் காட்டப்படும் EX.A6–ல் செல்வத்தின் தந்தை பெயர் அழகப்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் செல்வத்திற்கு யார் தந்தையோ அவர் பெயர்தான் குறிப்பிடப்பட முடியும் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் EX.A7–ல் செல்வத்தின் திருமண பத்திரிக்கையில் தந்தையாக யார் பெயர் உள்ளது என்றால் அழகப்பன் என்றுதான் உள்ளது. அழகப்பன்தான் செல்வத்திற்கும் 1ம் வாதியான சத்தியாவிற்கும் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் செல்வத்திற்கும் 1ம் வாதியான சத்தியாவிற்கும் திருமணம் செய்து வைத்தற்கான உண்மையான ஆவணம் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் EX.A11–ல் செல்வத்தின் இறப்பு சான்றிதழில் தந்தை பெயர் அழகப்ப படையாச்சி என்றுதான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அழகப்பன் தந்தையாக இருந்தால்தான் அதில் அவர் பெயர்

குறிப்பிடமுடியும் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் EX.A12–ல் செல்வத்தின் வாரிசு சான்றிதழில் தந்தை பெயர் அழகப்ப படையாச்சி என்றுதான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அழகப்பன் தந்தையாக இருந்தால்தான் அதில் அவர் பெயர் குறிப்பிடமுடியும் என்றால் சரிதான்.

மேற்படி செல்வம் சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதற்கு முன்புவரை, நான் நேரிட்டு பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் செல்வத்தின் திருமணத்திற்கும் செல்லவில்லை. நான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதற்கு ஏதோனும் அழைப்பாணை கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. சேகர்தான் என்னை சாட்சிசொல்ல அழைத்துவந்தார். என்னுடைய வாக்குமூலத்தில் உள்ள வாசகங்கள் அனைத்தும் சேகர் சொல்லிதான் தட்டச்சு செய்து தயார் செய்யப்பட்டது என்றும் அதை நான் படித்துமட்டும் பார்த்து கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். சேகர் எனக்கு நண்பர் என்ற பழக்கம் உள்ளது. சேகர் எனக்கு நண்பர் என்பதால், அவருக்கு ஆதவராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் அழகப்ப படையாச்சியின் குடும்ப விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அவருக்கு ஒரே தாரம் மற்றும் மூன்று பிள்ளைகள்தான்.

மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் இறந்த செல்வத்திற்கு தந்தை அழகப்ப படையாச்சி என்றால் சரிதான். ஆரங்கூரில் எனக்கு செல்லப்பெருமாள் என்று யாரும் தெரியாது. மேற்படி செல்லப்பெருமாள் எப்போது இறந்தார் என்றும் அவருக்கு எப்போது திருமணம் ஏற்பட்டு, அவருக்கு எத்தனை பிள்ளைகள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

மேற்படி செல்வம் என்பர் எப்போது வெளிநாட்டிற்கு சென்றார், எந்த நாட்டிற்கு சென்றார் என்ற விபரமும், எவ்வளவு சம்பாதித்தார் என்ற விபரமும் எனக்கு தெரியாது. செல்வத்தை யார் வெளிநாடு அனுப்பினார் என்றால் அழகப்ப படையாச்சி அனுப்பி வைத்தார். மேற்படி செல்வத்தின் மனைவி சத்தியாவை எனக்கு தெரியும். செல்வமும் சத்தியவுக்கும் ஒரு மகன் இருந்தார் அவர் ஜீவபாரதி என்றால் சரிதான்.

செல்வம் இறந்ததால் அவரது பூர்வீக சொத்து மற்றும் அவரது தந்தை அழகப்ப படையாச்சி சொத்தில் செல்வத்தின் பாகம் சம்மந்தமாக வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்குச் சொத்தில் சத்தியா மற்றும் ஜீவபாரதி ஆகியோருக்கு உள்ள பாகத்தை பிரதிவாதிகளால் மறுக்க இயலாது என்றால் சரிதான். சேகர் எனக்கு நண்பர் என்பதால் அவருக்கு அனுசரணையாக நான் பொய்சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி செல்வத்திற்கு அவரது தகப்பனார் அழகப்பன்தான் என்பதற்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அதற்கு எதிராக என்னால் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 1, 2 வாதிகள் அவர்களின் பாகத்தை கோர எனக்கு ஆட்சைபணை இல்லை என்றால் சரிதான். என்னுடைய வாக்குமூலத்தில் அழகப்ப படையாச்சிக்கு செல்வம் பிறக்கவில்லை என்பதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் வாதிகள் கோரியவாறு தீர்ப்பளிக்க வேண்டும்.

**குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.**

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**Principal District Munsif,(F.A.C)**
**Tittagudi.**